Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

1. 1.Start - > All programs - > Adobe InDesign CC 2019 என்பதை தேர்வு செய்யவும் . (அ) InDesign திரைமுகப்பில் உள்ள குறுக்கு வழியைத் தேர்வு செய்யவும் .
   2."Welcome to InDesign " என்ற சன்னல் திரை திறக்கப்படும் .இப்பொழுது Create New பொத்தானைக் கிளிக் செய்யவும் .
   3.இப்பொழுது New Document window புதிய ஆவண சன்னல் திறக்கப்படும் .
   4.புதிய ஆவணத்தில் அடிப்படை தேர்வுகளை பொருத்துவதற்கு New Document உரையாடல் பெட்டியில்
   Category தத்தலில் உள்ள Print , Web (அ) Mobile - ஐ தேர்வு செய்யவும் .
   5.Width and Height , orientation , Pages , Start , Columns போன்ற தேர்வுகளை ஏற்கனவே தேர்வுசெய்யப்பட்ட தொகுதியில் குறிப்பிடவும்.
   6.முன்பே இருத்தப்பட்ட அமைப்புகளோடு ஆவணத்தை திறக்க Create பொத்தானைக் கிளிக் செய்யவும்.
2. **i) பயன்பாடு பட்டை :**
   1. இது பணித்தளத்திற்கு மேல் உள்ளது .இதில் பல படிகள் உள்ளன .
   2. பட்டியை திறக்க , பயன்பாட்டு பட்டையில் உள்ள பட்டியின் பெயரை கிளிக் செய்யவும் .
   3. ஒவ்வொரு பட்டியும் பட்டி வகையோடு தொடர்புடைய கட்டளையை பட்டியலிடும்.
   ii) ஆவண தத்தல் :
   1. கிடைமட்ட ரூலர்க்கு மேல்பகுதியில் உள்ளது .
   2. ஆவணத்தின் பெயர் , உருப்பெருக்கத்தின் நிலை மற்றும் மூடு பொத்தான் ஆகியவற்றைக் கொண்டுள்ளது
   3. ஒன்றிற்கு மேற்பட்ட ஆவணங்கள் திறந்திருந்தால் , ஒவ்வொரு ஆவணத்திற்கும் ஒரு தத்தல் தோன்றும் மற்றும் ஆவண தத்தல்கள் கிடைமட்ட வரிசையில் தோன்றும்
   4.ஆவண தத்தலை கிளிக் செய்து , அந்த ஆவணத்தைச் சன்னல் திரையில் காணலாம்
   iii) கருவிகள் பலகம் :
   1.InDesign - ல் இருக்கும் அனைத்து கருவிகளும் கருவிகள் பலகத்தில் இருக்கின்றன .
   2.பொருளை உருவாக்கும் கருவிகள் , பொருளை உருமாற்றும் கருவிகள் , பக்கக் காட்சியை மாற்றுதல் மற்றும் பணித்தளத்திற்கு செல்லுதல் கருவிகள் ஆகிய கருவிகள் உள்ளன .
3. 1. கருவிப் பலகத்தில் பாதைக் கருவியில் உள்ள தட்டச்சை தேர்வு செய்யவும்.
   2. தட்டச்சை சேர்க்க பாதையின் விளிம்பில் கிளிக் செய்யவும். (திறந்து அல்லது மூடி) உரைச் சட்டகத்தில் ஒரு ஒளிரும் செருகும் புள்ளி தோன்றும். பொருளில் எல்லை நீக்கப்படும்.
   3. ஏதேனும் ஒரு உரையைத் தட்டச்சு செய்யவும். உரை தானாகவே மடிந்து உரைச் சட்டகத்திற்கு ஏற்றவாறு அமையும்.
   4. பொருளின் விளிம்பில் தட்டச்சு தோன்றும். எல்லைகளை நீக்கிவிட்டு அதன் வடிவத்தில் உறுதியாக அமைகிறது.
   5. Overflow குறியீடு தோன்றினால் உரைச் சட்டகத்தின் தேர்வை நீக்கி, தேர்வுக் கருவியை கருவிப் பலகத்தில் இருந்து தேர்வு செய்து உரைச் சட்டகத்தில் ஒரு மூலையில் இழுக்கவும்.
   6. தேர்வுக்கருவியை தேர்வு செய்யவும் (அ) தட்டச்சு கருவியை மீண்டும் தேர்வு செய்யவும்.
4. 1. பட்டிப்பட்டையில் இருந்து File → Place ஐ தேர்வு செய்யவும்.
   2. Place உரையாடல் பெட்டி தோன்றும்.
   3. இருத்தப்பட வேண்டிய உரைக் கோப்பை தேர்வு செய்து Place உரையாடல் பெட்டியின் வலது பக்கத்தில் உள்ள Open பொத்தானைக் கிளிக் செய்யவும்.
   4. செருகும் புள்ளி செறிவூட்டப்பட்ட உரை செருகும் புள்ளியாக மாறுகிறது. ஆவணத்தில் உரை செருகுவதற்குத் தயாராக உள்ளது என்பதைத் தெரிவிக்கிறது.
   5. உரையை இருத்துவதற்கு கிளிக் செய்யவும் (அ) புதிய உரைச் சட்டகத்தை உருவாக்குவதற்கு கிளிக் செய்து இழுக்கவும்.
   6. உரையை உரைச்சட்டகத்தில் இருத்த முடியவில்லை எனில், ஒரு சிவப்பு + குறியானது. உரைசட்டகத்தின் கீழ் வலது எல்லையில் Overflow குறியீடாகத் தோன்றும்.
   7. இந்த Overflow குறியீட்டை கிளிக் செய்தால் மீதமுள்ள உரை செருகும் புள்ளியில், கூடுதல் உரைச் சட்டகத்தில் உரையைச் சேர்ப்பதற்காக ஏற்றப்படுகிறது. உரையானது கிளிக் செய்யும் பொழுது இருத்தப்படும்.
5. வரைகலை சட்டகம் பிற மென்பொருள் நிரலில் உள்ள படங்களைத் தருவிக்கப் பயன்படுகிறது.
   1. வரைகலைச் சட்டகத்தை உருவாக்கவும்
   2. File > Place என்பதைத் தேர்ந்தெடுக்கவும். Place உரையாடல் பெட்டி தோன்றும்.
   3. சட்டகத்தில் செருக விரும்பும் படத்தைக் கண்டுபிடித்து தேர்ந்தெடுக்கவும்.
   4. Open மீது கிளிக் செய்யவும்.
6. InDesign-ல் இருக்கும் அனைத்து கருவிகளும் இந்த கருவிகள் பலகத்தில் இருக்கின்றன. பொருளை உருவாக்கும் கருவிகள் (Rectangle கருவி) பொருளை உருமாற்றும் (Transforming) கருவிகள் (Rotate கருவி), பக்க காட்சியை மாற்றுதல் மற்றும் பணித்தளத்திற்கு செல்லுதல் கருவிகள் (Zoom கருவி மற்றும் Hand கருவி) ஆகிய கருவிகள் உள்ளன. சில கருவிகளின் கீழ் வலது மூலையில் ஒரு சிறிய முக்கோணம் இருக்கும். மேலும் கூடுதலான கருவிகள் அந்த கருவியின் கீழ் உள்ளன. என்பதை இந்த முக்கோணம் குறிக்கும். கிளிக் செய்து அழுத்தி பிடிப்பதன் மூலம் மறைந்திருக்கும் கருவிகளைக் காணலாம்.
   கருவிப்பலகமானது.
   1. தேர்ந்தெடுப்புக் கருவிகள்
   2. அடிப்படை வடிவங்களை வரைவதற்கான கருவிகள்
   3. வரைதல் மற்றும் புதுப்பித்தல் கருவிகள்
   4. பரிமாற்றம் கருவிகள்
   5. உரை பதிப்பித்தல் கருவிகள்
   6. நகர்தல் கருவிகள்
   7. பொருள் வடிவமைப்பு கருவிகள் , போன்றவற்றை கொண்டுள்ளது தானமைவாகக் கருவிப்பலகம் , கட்டுப்பாடுப் பலகத்திற்கு கீழே உள்ளது .ஆவண சன்னலின் இடது புறம் உள்ள கருவி பலகத்தில் அனைத்து கருவிகளும் காணப்படும் .

7. **1. தேர்ந்தெடுப்புக் கருவி**



:

இது பொருட்களை அல்லது பொருட்களின் தொகுதியை தேர்ந்தெடுக்க பயன்படுகிறது. V என்ற பொத்தானை அழுத்தி இந்தக் கருவியை தேர்ந்தெடுக்கலாம்.

2. நேரடி தேர்வு கருவி(Direct selection tool)



:

இது ஒரு குழுவில் இருந்து ஒரே ஒரு பொருளை தேர்ந்தெடுக்க உதவுகிறது . (A வை அழுத்தவும்) உதவுகிறது.
(Group கட்டளை மூலம் பல்வேறு தனித்தனி பொருள்கள் குழுவாக சேர்ந்துள்ளன). அல்லது ஒரு பொருளின் பாதையில் ஒன்று அல்லது பல புள்ளிகளைத் தேர்ந்தெடுக்கிறது

3. இடைவெளி கருவி (Gap tool)



:

இந்த இடைவெளிக்கருவி (Gap tool) பொருள்களுக்கு இடையே உள்ள இடைவெளியை சரிசெய்யப் பயன்படுகிறது. இந்தக் கருவியைத் தேர்ந்தெடுக்க U என்ற பொத்தானை அழுத்தவும்.

8. 1. பெரிதாக்குதல் (Zoom in)
   2. சிறிதாக்குதல் (Zoom Out) 3. Actual Size
   4. Fill page in window
   5. Fit spread in window
   6. Entire pasteboard
9. • Ctrl + = அழுத்தவும் - பெரிதாக்குதல்
   • Ctrl + - அழுத்தவும் - சிறிதாக்குதல்
   • Ctrl + 1 பக்கத்தை அதன் சரியான அளவில் காணுதல்
   • Ctrl + 2 பக்கத்தை 200% அளவில் காணுதல்
   • Ctrl + 0 ஆவண சன்னலில் முழு பக்கத்தையும் பொருத்துதல்
   • Alt + Ctrl + ஆவண சன்னலில் முழு பரவலையும் பொருத்துதல்
   • Ctrl + Spacebar (or)
   • Ctrl + Alt + Spacebar தற்காலிகமாக Zoom கருவியை அணுகுதல் (பெரிதாக்க அல்லது சிறிதாக்க)
10. 1. கீழொட்டு அல்லது மேலோட்டாக மாற்றப்படவேண்டிய எழுத்தை தேர்ந்தெடுக்கவும் .
    2.கட்டுப்பாட்டுத் தட்டில் உள்ள ஏதேனும் ஒரு பொத்தானை கிளிக் செய்யவும்

    மேலோட்டு

    

    கீழொட்டு

    3. தேர்வு செய்யப்பட்ட எழுத்து தேவைப்படும் படி மாறும்.
11. 1. சில நேரங்களில், நமது பதிப்பிற்கு தேவைப்படும் ஒரே வகை பொருள் எளிய வடிவங்களாகும்
    2. வடிவங்களை உருவாக்கும் Rectangle , Ellipse , Polygon போன்ற கருவியைத் தேர்ந்தெடுக்க , கருவிகள் பலகத்தில் Rectangle கருவி மீது கிளிக் செய்து சுட்டெலி பொத்தானை அழுத்தி பிடித்தவாறே , நாம் பயன்படுத்த விரும்பும் வடிவக் கருவியைத் தேர்ந்தெடுக்கலாம் .
    3.வடிவ கருவி தேர்ந்தெடுக்கப்பட்ட பின் ஆவணத்தில் அதை கைமுறையாக இழுப்பதன் மூலம் வடிவத்தை உருவாக்கலாம் (அ) ஆவணத்தில் கிளிக் செய்து Shapes உரையாடல் பெட்டியைத் திறந்து அதன் அமைப்பை வரையறுக்கலாம் .
12. வரைகலை சட்டங்களை வரைவதற்கு கருவிகள் பலகம் மூன்று கருவிகளை கொண்டுள்ளது .
    1.Ellipse சட்டகம் - நீள்வட்ட மற்றும் வட்ட சட்டங்களை உருவாக்கலாம்.
    2.Rectangle சட்டகம் - செவ்வக மற்றும் சதுர சட்டங்களை உருவாக்கலாம் .
    3.Polygon சட்டகம் - சமபக்க பலகோண சட்டங்களை உருவாக்கலாம் .
13. (i) InDesign என்பது பக்க வடிவ அமைவு மென்பொருள் நிரலாகும்.
    (ii) ஆவணப் பக்கங்களில் உரை மற்றும் வரைகலையின் நிலைப்பாட்டை எளியதாக்க அனுமதிக்கும் கருவிகளை பக்க அமைவு மென்பொருள் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, InDesign-ஐப் பயன்படுத்தி, ஒவ்வொரு பக்கத்திலும் கட்டுரைகள் (articles) மற்றும் படங்களை உள்ளடக்கிய செய்திமடலை (Newsletter) நீ உருவாக்கலாம்.
    (iii) வடிவமைப்பிற்கும் மற்றும் வலையில் அச்சிடுவதற்கு (அ) பயன்படுத்துவதற்கான ஆவணங்களை உருவாக்குவதற்கும் பயன்படுகிறது.
14. இரண்டு வகையான பக்க அமைவுகள் :
    1. Landscape
    2. Portrait
15. (i) பணித்தளம் என்பது பணி உருவாக்கப்படும் இடம் ஆகும் .
    (ii) பணித்தளம் ஒரு முடிக்கப்பட வேண்டிய தயாரிப்புகளை உருவாக்கும் இடம் ஆகும் . இது ஒரு ஓவியர் ஓவியத்தை உருவாக்குவது போல உள்ளது. முதல் முறையாக InDesignஐ தொடங்கும் போது தானமைவாக இடம் பெறும் பணித்தளம் “Essentials” எனப்படும். இது மேலே கட்டுப்பாட்டுப் பலகம், இடப்புறம் கருவிப்பலகம் ஆகியவற்றுடன் InDesign சன்னல் திரையில் தோன்றும்.
    (iii) திரையில் தோன்றும் சன்னல்கள் மற்றும் பலகங்கள் ஆகியவற்றின் அமைப்பே பணித்தளம் எனப்படும்.
16. (i) முதல் முறையாக InDesign ஐ - தொடங்கும் போது தானமைவாக இடம் பெறும் பணித்தளம் " Essentials " எனப்படும்
    (ii) இது மேலே கட்டுப்பாட்டுப் பலகம் , இடப்புறம் கருவிப்பலகம் ஆகியவற்றுடன் InDesign சன்னல் திரையில் தோன்றும் .
17. (i) ஓட்டுப்பலகை என்பது ஆவணச் சன்னலைச் சுற்றியுள்ள சாம்பல் நிறப்பகுதி ஆகும் .
    (ii) ஒரு பக்கத்தில் உருப்படிகளைச் செருகுவதற்கு முன்பு ஓட்டுப்பலகையில் அவற்றை வைக்கலாம்.
18. கருவிப்பலகத்தில் கிளிக் செய்யாமல் ஏதேனும் ஒரு கருவியின் மீது செருகும் புள்ளியை வைக்கும் பொழுது Tooltip தோன்றும்.

QB 365 Study Material
QUESTION BANK 365

19. ஒரு ஆவணத்தின் உள்ளே பல்வேறு பக்க அளவுகளை உருவாக்க Page tool பயன்படுகிறது .
வெவ்வேறு பக்க அளவுகளை உருவாக்க :
1.Shift + P யை அழுத்தி பக்க கருவிகளைத் தேர்ந்தெடுக்க கிளிக் செய்யவும் .
2.இப்பொழுது கட்டுப்பாட்டுப் பலகத்தில் (Control Page)உள்ள தேர்வைப் பயன்படுத்தி பக்க அமைவை மாற்றவும் .

20. **பெரிதாக்கல் (Zooming) :**
InDesign-ல் உள்ள சில பணிகளுக்கு, ஒரு பொருளை அல்லது பொருளின் ஒரு பகுதியை உயர் உருப்பெருக்கம் அல்லது பெரிதாக்குதல் மூலம் பார்வையிடுதல் தேவைப்படுகிறது.
ஒரு ஆவணத்தில் உள்ள ஒரு பொருளை பெரிதாக்கி (Zoom in) உற்று நோக்க பெரிதாக்குதல் அனுமதிக்கிறது. அந்தப் பொருளை (Zoom out) சிறியதாக்கி விலகிச் சென்று பார்க்க சிறிதாக்குதல் பயன்படுகிறது.
ஆவணத்திலுள்ள எந்த பொருளையும் விரைவாக பெரிதாக்கல் (அ) பொருளை மிக அருகில் கொண்டு வருதல்.

21. Window --> Tools ஐ தேர்ந்தெடுத்து கருவி பலகத்தை மூடலாம் .இதை மீண்டும் திறக்க Window -->Tools ஐ மறுபடியும் தேர்ந்தெடுக்கவும் .
அல்லது
Tab சாவியை அழுத்தி கருவிப்பலகத்தில் உள்ள அனைத்து திறந்த பலகங்களையும் மூடலாம் .அந்த பலகங்களை மீண்டும் திறக்க Tab சாவியை மீண்டும் அழுத்தவும்.மிதவை கருவிப் பலகத்தை மூடுவதற்கு Close பெட்டியையும் கிளிக் செய்யலாம்

22. i) புல்லட்டுகள் (அ) எண்கள் சேர்க்க விரும்பும் பத்தியை தேர்ந்தெடுக்கவும் .
ii) Type --->Bulleted & Numbered lists யைத் தேர்ந்தெடுக்கவும் .பிறகு Apply bullets (அ)Apply Numbers ஐ கிளிக் செய்யவும்.
Bullets and Numbering உரையாடல் பெட்டியில் இறுதியாக பயன்படுத்திய அமைப்பை உரைக்கு செயல்படுத்தப்படும்.

23. (a) கதை (story)
24. (a) உரைச் சட்டம் (text frame)
25. (a) ஒட்டுப்பலகை (paste board)
26. (a) பரவல் (spread)
27. (a) கருவி பலகம்
28. (a) Gutter
29. (a) வரைகலை (Graphics)
30. (d) இவை அனைத்தும்
31. (a) Gradient
32. (a) Spot நிறங்கள்
33. (a) நிரப்பு (fill)
34. (a) எல்லை (stroke)

QB 365 Study Material
QUESTION BANK 365